மனித நேய உறவுகள்

மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன். முல்லைக்குத் தேர் வழங்கிய பாரி. தாய்ப்பசுவிற்கு நீதி வழங்கிய மனு நீதிச் சோழன். புறாவைக் காப்பாற்ற தன் தொடையிலிருந்து சதை அறுத்து வழங்கிய சிபிச்சக்கரவர்த்தி வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் என்று சிறிய உயிர்களிடத்தும் அன்பு செலுத்திய நம் முன்னோர்கள் வழி நடக்காவிட்டால் கூட சக பெரிய உயிர்களிடத்தாவது அன்பு செலுத்துவது நமது கடமை ஆகும்.

மனித நேயம் அற்றுப் போன காலமிது. சிலையின் மீது கீறல், சிந்தனை செய்யும் மனிதன் சின்னாபின்னம் என்ற ஒரு மோசமான கால கட்டத்தை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கின்றோம் என்பதைத் தற்கால நிகழ்வுகள் வலியுறுத்துகின்றன. சிலைகளுக்கும், மதங்களுக்கும் கொடுக்கும் மரியாதையை சக மனித உயிர்களுக்கு நாம் தர மறந்தது ஏன்?

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு', 'தனி மரம் தோப்பாகாது', 'மனிதன் தன் தீவுச் சிந்தனையால் முன்னேறி விட முடியாது' என்று மனித நேயத்தை வளர்க்க எத்தனை எத்தனை சத்திய வாசகங்கள்? மனித இனம் ஒற்றுமையாக வாழ வேண்டிய கட்டாயத்தை எடுத்துரைக்கும் எத்தனையோ ஆலோசனைகள். 'சமுதாய விலங்கு' என்று அழைக்கப்பட்டதால் இத்தனை அறிவுரைகளையும், அறவுரைகளையும் மீறி மனிதன் விலங்காய்ப் போனானா? என்ற சந்தேகம் பலமுறை நமக்கு எழுகிறதல்லவா?

இங்கு 'ஆளவந்தான்' என்ற சினிமாப் படத்தில் வரும் ஒரு பாடல் நினைவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

கடவுள் பாதி, மிருகம் பாதி,
கலந்து வைத்த கலவை நான்
உள்ளே கடவுள், வெளியே மிருகம்,
விளங்க முடியாக் கவிதை நான்,
மிருகம் கொன்று, மிருகம் கொன்று
கடவுள் வளர்க்கப் பார்க்கின்றேன், ஆனால்
கடவுள் கொன்று உணவாய்த் தின்று
மிருகம் மட்டும் வளர்கிறதே

நந்த குமாரா! நந்த குமாரா!
நாளை நீ மிருகம் கொல்வாயா?

உங்களில் நீங்கள் மிருகம் கொல்வீர்களா?

மிருகம் தலையெடுக்கும் பொழுது தான் மனிதம் செத்து விடுகின்றது. மனித நேயப் பண்புகள் குழி தோண்டிப் புதைக்கப் படுகின்றன. அமைதிக்கும் பஞ்சமேற்பட்டு விடுகிறது. சாதி சமயச் சண்டைகள், உள்நாட்டுப் போர்கள், உலக நாடுகளுக்கிடையே உரசல்கள் என்று மனித ஜீவராசியை இந்த பூவுலகை விட்டே விரட்ட முயற்சிக்கும் காரணிகள் பல.

இத்தகையதோர் சூழலில் மனிதம் உயிர்த்தெழ நாம் முயற்சி செய்வது அவசியம் அல்லவா? என்ன நண்பர்களே நீங்கள் அனைவரும் நாளை மிருகம் கொல்வீர்களா?

உள்ளுறவைப் பெருக்கி உலக உறவை மேம்படுத்துவது

ஆன்மீகத் தேடல்களைவிடுத்து ஆஸ்திகளைத் தேடி மனிதன் ஓட ஆரம்பித்ததன் விளைவினால் சக உயிர்களிடத்து அன்பு குறைந்து சுயநலம் பெருக ஆரம்பித்துள்ள காலமிது. அமைதி பெருக்க அச்சாரம் போட வேண்டிய தருணம் இது. தற்சார்பையும் தாண்டி பரஸ்பரம் ஒருவரையொருவர் சார்ந்து தான் வாழ முடியும் என்பதை உணர வேண்டிய, உணர்த்த வேண்டிய காலம் வந்து விட்டது. உள்ளுறவைப் பெருக்கி உலக உறவை மேம்படுத்துவது தான் காலத்தின் கட்டாயம்.

உலகத்தொடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார் (140)

என்று வள்ளுவன் உலக உறவின் மாண்பினையும் அது தெரியாதவர்கள் எவ்வளவு கல்வி மேன்மை படைத்திருந்தாலும் அறிவிலாதார் தான் எனக் கூறுவார்.

மற்றவர்களுடன் ஒத்து உறவாடும் தன்மையை வைத்துத் தான் ஒரு மனிதனின் பழகும் முறையும், பண்பாடும் தெரிய வரும். இதை வைத்துத் தான் அவர்தம் பழகும் திறனும் எடைபோடப்படும்.

உலகோடு ஒட்ட ஒழுகல் ஒரு தலைமைப் பண்பு நலனாகும். அந்தத் தலைவனின் ஒவ்வொரு செயல்பாட்டிலும் மனித நேயப் பண்புகள் வெளிப்பட்டால் அவனால் வேண்டுவன கிடைக்கப் பெற முடியும்.

மனித நேயப் பண்புகள்

அன்பு:

மனித நேயத்திற்கு அடிப்படையே அன்பு தான். பிற உயிரிடத்தில் அன்பு செய்ய வேண்டும் எனக் கூறுவர். அன்பே சிவம், அன்பே கடவுள் என்றெல்லாம் பறைசாற்றப் படுகின்றது. சுவாமி விவேகானந்தர் கூறுவார்;: "இந்த உலகில் உள்ள அனைவரிடமும் அன்பு செலுத்துங்கள். அப்படி முடியாவிடில் உங்கள் நாட்டில் உள்ள அனைவரிடமாவது அன்பு செலுத்துங்கள். அதுவும் முடியாவிட்டால் உங்கள் ஊரில் உள்ளவர்களிடமாவது அன்பு செலுத்துங்கள். அதுவும் சிரமம் என்றால் உங்கள் தெருவிலுள்ள அனைவரையுமாவது நேசியுங்கள். அதுவும் சிரமமென்றால் உங்கள் வீட்டிலுள்ளோரையாவது நேசியுங்கள். இதுவும் கடினமென்றால் உங்களைத் தவிர்த்து இன்னும் ஒருவரையாவது நேசியுங்கள். ஆனால் தயை செய்து உங்களை மட்டும் நேசித்துக் கொண்டிருக்காதீர்கள்.'

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

தம் மனதில் அன்பு சிறிதேனும் இல்லாதவர்கள் எல்லாப் பொருட்களையும் தமக்கே உரியதாகக் கொண்டு வாழ்வார்கள். ஆனால் அன்புடையவர்களோ தம் பொருள்கள் மட்டுமன்றி தம்மையே பிறருக்கு உரிமையாக்குவர் என்று வள்ளுவப் பெருந்தகை அன்பின் சிறப்பைப் பற்றி அருமையாக விளக்குகின்றார்.

இது நடந்தது ஒரு அமெரிக்கச் சேரியில். ஒரு சமூகவியல் விஞ்ஞானி அங்குள்ள மாணவர்கள் மத்தியில் ஒரு 200 பேரைத் தேர்ந்தெடுத்து ஓர் ஆராய்ச்சி செய்கின்றார். ஆராய்ச்சியின் முடிவில் அந்த 200 மாணவர்களில் ஒருவர் கூட முன்னேறுவதற்கான சாத்தியமில்லை என்று அறிக்கை சமர்ப்பிக்கின்றார். 20 ஆண்டுகள் கழித்து இன்னுமொரு சமூகவியல் விஞ்ஞானி இந்த ஆய்வறிக்கை

சரிதானா என்று அதே மாணவர்களைக் களமாக வைத்து தனது ஆராய்ச்சியை ஆரம்பிக்கின்றார். அந்த மாணவர்களில் 10 பேர் இறந்து விட்டனர். 15 பேர் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்கு மாறிச் சென்று விட்டனர். மீதி உள்ள 175 பேரிடம் ஆராய்ச்சியைத் தொடங்கிய பொழுது அவர்கள் அனைவருமே வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் அடைந்திருந்தது கண்டு ஆச்சரியம் அடைந்தார். அவர்களனைவருமே டாக்டர்களாக, பொறியியல் வல்லுனர்களாக, ஆசிரியர்களாக, தொழில் முனைவோராக, வழக்குரைஞர்களாக ஒரு நல்ல நிலையை சமூகத்தில் அடைந்திருந்தனர். அனைவருமே அவரவர் தம் முன்னேற்றத்திற்குக் காரணம் ஒரு டீச்சர் என்று சொல்லி வைத்தாற் போலக் கூறுகின்றனர். அவரும் அந்த டீச்சரிடம் சென்று அவர் செய்த மேஜிக் என்ன என்று வினவியதற்கு அந்த டீச்சரோ,'நான் அவர்களை நேசித்ததைத் தவிர வேறு ஒன்றுமே செய்யவில்லை' என்று பதிலளித்தார்.

வாழ்வில் முன்னேறுவதற்கான எந்தவிதமான சாத்தியக் கூறுகளுமே இல்லை என்று கருதப்பட்டவர்களை வெறும் அன்பினாலேயே மிகப் பெரும் சாதனையாளர் ஆக்க முடிந்தால் அன்பின் மகத்துவத்தை என்னவென்று கூறுவது. ஆதலினால் பிறரிடத்து அன்பு செலுத்துங்கள் நண்பர்களே.

பணிவு:

'பணியக் கற்றுக் கொள், கட்டளையிடும் பதவி தேடி வரும்', என்று சுவாமி விவேகானந்தர் கூறுவார். வள்ளுவனோ பெருமைக் குணம் என்பது எக்காலத்திலும் பணிந்து நடக்கும் என்றும் சிறுமை என்பது தன்னிடத்திலே நற்குணம் இல்லாது போனாலும் தன்னைத் தானே வியந்து பாராட்டிக் கொள்ளும் என்றும் பின் வரும் குறள் மூலம் விளக்குகின்றான்.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

புயல் காற்று கடுமையாக வீசினால் ஓங்கி வளர்ந்துள்ள ஆலமரம் வேருடன் சரிந்து விடுகின்றது. ஆனால் நாணலோ வளைந்து பின் நிமிர்ந்து நிற்கின்றது. வளையக் கூடிய மூங்கிலோ அரசனது கிரீடமாகின்றது. வளையாத மூங்கிலோ கழைக்கூத்தாடியின் கால்களில் லோல் படுகின்றது. பணிவு, மரியாதையெல்லாம் நாம் மற்றவரிடமிருந்து எதிர்நோக்கு கின்றோம். நாம் எதிர்பார்ப்பதை மற்றவருக்குக்

கொடுத்தால் அதைவிடச் சுகம் ஏதுமுண்டோ? பணிவு, மரியாதை போன்ற பெரிய வார்த்தைகளெல்லாம் வேண்டாம். சற்றே வளைந்து கொடுத்தால் போதும், வாழ்வு சிறக்கும். பணிவிற்கு உதாரண புருஷராக விளங்கிய தொண்டன் காமராசரை அதனால் தான் அவர் தலைவர் சத்தியமூர்த்தி தலைவராக்கிப் பார்த்தாரோ?

எனது நண்பர் ஒருவர் ஒரு வயதானவரிடம் என்ன பெரியவரே ஆரோக்கியமாக இருக்கின்றீர்களா? எனக் கேட்டார் பெரியவரும் குசும்பாக தன் வாயைத் திறந்து நாக்கை நீட்டிக் காண்பித்து இந்த அளவிற்கு ஆரோக்கியமாக உள்ளேன் என்றார். நண்பருக்கோ ஒன்றும் புரியவில்லை. பெரியவரே அவரிடம். தம்பி இறுமாந்து நின்ற பற்கள் காணாமல் போய்விட்டன. ஆனால் வளைந்து கொடுத்த நாக்கோ இன்றளவும் என்னுடன் உள்ளது என்றார். பணிவின் பெருமைக்கு இது நல்ல உதாரணம் தானே. ஆகையால் நண்பர்களே பணியக் கற்றுக் கொள்ளுங்கள். கண்டிப்பாகக் கட்டளையிடும் பதவி உங்களைத் தேடி வரும்.

பொறுமை:

அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

'தன் உடம்பு புண்படுமாறு வெட்டித் தள்ளும் மக்களையும் சுமந்து நிற்கும் நிலம் போலத் தம்மைப் புண்படவும் இகழ்ந்து கூறுவோரைக் கூடப் பொறுத்து நிற்பதே தலை சிறந்த பண்பாகும்' என்று பொறுமையின் சிறப்பை வள்ளுவர் மிகச் சிறப்பாக விளக்குகின்றார்.

உண்மையில் நடந்த நிகழ்வு ஒன்றைப் பற்றி இங்கு பார்ப்போம். ஒருசமயம் நம் தேசப் பிதா சிறையில் இருக்கும் பொழுது சிறைக் காவலர் எதற்காகவோ அவரைத் தன் காலால் உதைத்து விட்டாராம். விடுதலையாகும் பொழுது அண்ணல் அக்காவலருக்கு ஒரு ஜோடி செருப்பை பரிசளித்தாராம். அந்தக் காலணி தன் கால்களுக்குச் சரியாகப் பொருந்தியதைப் பார்த்து அந்த சிறைக்காவலருக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியம். 'நான் என் கால் அளவைக் கொடுக்கவே இல்லையே, இது எப்படி சாத்தியமாயிற்று' என்று கேட்டாராம். அதற்குக் காந்தி மகானோ, 'அன்று நீங்கள் என்னை உதைத்த பொழுது என் உடம்பில் ஏற்பட்ட அச்சின் அளவை வைத்துச் செய்தேன்' என்று அமைதியாகக் கூறினாராம். குறுகத் தரித்த குறள் தான் என் ஞாபகத்திற்கு வருகின்றது.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்

மனச் செருக்கினால் தமக்குத் தீமை இழைத்தோரையும், தாம் தம்முடைய பொறுமை எனும் நற்பண்பினால் வென்று விடுதல் வேண்டும் என்று வள்ளுவன் கூறுவான். ஔவையாரும் "பைபூச் சென்றால் வையம் தாங்கும்" (பொறுமையாகச் செய்யும் எச் செயலும் வெற்றியை அளிக்கும்) என்று பொறுமையின் சிறப்பைப் பற்றிக் கூறுவார். ஆகையால் நண்பர்களே, கடலினும் பெரிது என்று கூறப்படும் பொறுமையைக் கைக் கொள்ளுங்கள்.

இன்சொல்:

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

என்ற குறள் இன்பம் தரும் இனிய சொற்கள் இருந்தும் அவைகளைக் பயன்படுத்தாது ஒருவன் கடுஞ்சொற்களை உபயோகப்படுத்துவது சுவைப்பதற்கு நல்ல கனி இருந்தும் அதனை விடுத்துக் காயைத் தின்றது போல இருக்கும் என்று இனிய சொற்களை உபயோகிப்பதன் முக்கியத்துவத்தை நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது.



ஒரு தடவை அறிஞர் அண்ணா ஒரு நல்ல மனிதரான எதிர்க்கட்சி வேட்பாளரை எதிர்த்துப் பேச வேண்டியிருந்தது. அந்த எதிர்க்கட்சி வேட்பாளரை மிகவும் பாராட்டிப் பேசி அப்படிப்பட்ட நல்ல மனிதரின் சேவையை, அவரை சட்டசபைக்கு அனுப்பி தொகுதி மக்கள் இழந்து விடக்கூடாது என்று நயமாகக் கூறினார்.

தீயினாற் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

தீயினால் சுட்ட புண் முதலில் கொடுத்த நோய்த் துன்பம் நாளடைவில் நீங்கிப் போக உடலின் மீது வடுமட்டும் நிற்கும். அதனால் தீச்சொல்லினால் சுட்ட புண் உள்ளத்தில் என்றும் ஆறாது நின்று என்றும் நினைவில் நீங்கா வடுவாக அமைந்து விடும். எனவே மற்றவர்களைக் காயப்படுத்தாத சொற்களையே பிரயோகிக்க வேண்டும். இன்சொலின் பெருமையை விளக்கும் மற்றுமொரு குறள்

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இன்மையும் இன்பம் தரும்.

ஆகையால் நண்பர்களே இன்சொற்களை உபயோகித்து நீங்களும் இன்பமுற்று பிறரையும் இன்பமடையச் செய்யுங்கள்.

புறங்கூறான்மை:

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றால் இனிது

கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்நின்று பின்னோக்காச் சொல்

என்ற குறள்கள் புறங்கூறான்மையைப் பற்றி நமக்கு எடுத்துக்கூறுகின்றது. புறங்கூறுதல் பழகும் உறவைக் கெடுத்துவிடும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் விமர்சிக்கப்படுபவரின் முன்னிலையில் செய்யப்பட வேண்டும். பொதுவாகவே நமக்கு மிக அருமையான கேளிக்கையாக இருந்து வருவது அடுத்தவரைப்பற்றி அவர் இல்லாத நேரத்தில் பேசுவது தான். இதைத் தவிர்க்க வேண்டும். மூன்று நண்பர்கள் இருந்தார்கள். இவர்களது பொழுதுபோக்கே மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசி மகிழ்வதுதான். அதில் ஒருவனுக்கு வேலை இருந்ததால் அனைவரும் கலைந்து செல்லலாம் என்கிறான். மற்ற இருவரோ உனக்கு வேலை இருந்தால் நீ போ நாங்கள் இன்னும் சிறிது நேரம் இருக்கப் போகின்றோம் என்றனர். ஆனால் இவனுக்குக் தெரியுமே. இவன் போய்விட்டால் இவன் தலை தானே உருளும் என்று. ஆகையால் அனைவரும் சேர்ந்து கலைந்து செல்வதை மறுபடியும் வலியுறுத்துகின்றான். நண்பர்களிடையேகூட புறங்கூறுதல் பிரச்சனையாவது தெரிகின்றதா?

இதைத் தான் கோள் சொல்லுதல் என்று நம் வீட்டு முதியவர்கள கூறுவார்கள். ஒரு கதையில் படித்தேன். கோள் சொல்லுமுன் மூன்று கேள்விகளுக்கு விடை தேடுங்கள்.

1. சொல்லப்போகும் செய்தி 100 சதவீதம் உண்மையானதா?
2. அது நல்ல செய்தி தானா?
3. அதனால் சொல்பவருக்கும் சொல்லப்படுபவருக்கும் அதனால் ஏதாவது நன்மை பயக்குமா?

எதிர்மறையான பதில் வந்தால் அந்த செய்தியை சொல்லாமல் இருத்தலே நலம்.

ஆறுவது சினம் :

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புனையைச் சுடும்

இங்கு சேர்ந்தாரைக் கொல்லி என்று வருவது வள்ளுவர் உபயோகித்த பிரத்தியேகக் கலைச் சொல். நம் இனம் என்னும் இன்பத் தெப்பத்தை சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லும் வியாதி காலி பண்ணி விடும். சினம் நமது உடலளவிலும் மனதளவிலும் நம்மிடையே பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விடும். கோபம் வரும் பொழுது 100,99,98.. .. .. என்று தலைகீழாக எண்ணத் துவங்குங்கள். அல்லது ஒரு டம்ளர் தண்ணீர் குடியுங்கள் அல்லது நான் கோபமாக இருக்கிறேன் என்று உங்களுக்குள்ளேயே ஒரு முறை கூறிக் கொள்ளுங்கள். சினத்தின் வேகம் குறைவதை நீங்களே கண்டு கொள்ளலாம்.

நிகில் பவுன்டேஷனின் சக பயிற்சியாளர் திரு 'வைகை' விஸ்வநாதன் அவர்கள் கூறுவது நினைவிற்கு வருகின்றது. வயல்வரப்பு வழியாக பாயும் தண்ணீரானது அந்த வரப்பை செழிப்புடன் வைத்துக் கொள்ள உதவுகின்றது. அதே சமயம் ஒரு அமிலத்தைத் தொட்டிக்கு எடுத்துச் செல்லும் குழாய்களின் நிலையை யோசித்துப் பாருங்கள். அந்தக் குழாய்களும் அரிக்கப்படுகின்றன அல்லவா. அது போலத்தான் கோபத்தை உங்கள் மனதில் கொண்டால் இரத்த நாளங்களில் அமிலத்தை அனுப்புவது போலத் தான். ஆக சினம் தவிர்ப்பது மற்றவருடைய நன்மைக்காக அல்லாவிடினும் கண்டிப்பாக நமது நன்மைக்கும்தான்.

ஒரு தந்தை மகனிடம் ஒரு தெர்மோகூல் போர்டு ஒன்றையும் சில பட்டன் ஆணிகளையும் கொடுத்து அவனுக்குக் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாத பொழுதெல்லாம் அந்த போர்டில் ஒரு ஆணியைக் குத்தச் சொன்னார். நாளாக, நாளாக போர்டு முழுவதும் ஆணிகளாக மாற ஆரம்பித்தது போய் இப்பொழுது நாட்கணக்கில் ஆணியைக் குத்த வேண்டிய தேவை இல்லாது போயிற்று. இதைப்பார்த்த தந்தையானவர் மகனிடம் இன்றிலிருந்து கோபத்தைக் கட்டுப்படுத்த முடிந்த பொழுதெல்லாம் ஒவ்வாரு ஆணியைப் பிடுங்கிக் கொள்ளலாம் என்றார். ஒரு நாள் மகன் தந்தையிடம் ஆணிகளே இல்லாத போர்டைக் காண்பித்தான். தந்தையும் அவனைப் பாராட்டி விட்டு அந்த போர்டைப் பார்க்கச் சொன்னார். ஆணி குத்திய இடங்களெல்லாம் சிறுசிறு துவாரங்களாக இருந்தன. என்னதான் கோபப்பட்ட பிறகு மன்னிப்புக் கோரினாலும் அதனால் ஏற்பட்ட காயத்தின் வடு அங்கேயே நிலைத்து விடும் என்று அவனிடம் கூறினார். ஆகையால் நீங்களும் கோபத்தைத் தவிர்த்து விடுங்கள் நண்பர்களே.

ஏற்றுக் கொள்ளல்;

மானுட உறவுகளில் பிரச்சனை அதிகம் வருவதற்குக் காரணம் இந்த ஏற்றுக்கொள்ளல் தன்மை குறைந்து வருவதால் தான். குறை இல்லாத மனிதர் யார் இருக்க முடியும்? இன்று கணிணி மென்துறையில் வேலைபார்ப்போர் அநேகர் திருமணமான குறுகியகாலத்திற்குள்ளேயே விவாகரத்தை நாடிச் செல்வது, அதிக மன அழுத்தம் கொள்வது, அதனால் வேறு பல வியாதிகளுக்குட்படுவது இவை அனைத்தும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை நம் இளைய சமுதாயம் இழந்து கொண்டு வருகின்றது என்பதைத் தான் காண்பிக்கின்றது. ஒருவரிடம் கோபப்படுவதற்கு ஒரு நியாயமான காரணம் இருந்தால் கூட அவரை நேசிப்பதற்கு பல ஆயிரம் காரணங்கள் கண்டிப்பாக இருக்கும். ஆகையால் ஏற்றுக்கொள்வது என்பது சிறந்த பண்பு.



நெல்லுக்கு உமியாகிய குற்றமுண்டு
நீருக்கு நுரையாகிய குற்றமுண்டு
பூவிற்கு புறவிதழாகிய குற்றமுண்டு

நாமென்ன அவைகளை ஒதுக்கியா வைத்து விட்டோம். நமக்கு ஆப்பிள் சாப்பிட ஆசையாக உள்ளது. ஆனால் கடையில் கிடைக்கும் ஆப்பிள்களில் கரும்புள்ளிகள் நிறைய உள்ளன. என்ன செய்வோம்? ஒரு கத்தியை எடுத்து கரும்புள்ளிகளைச் சீவிவிட்டு ஆப்பிளை சாப்பிட்டு விட மாட்டோமா? அதுபோல் குறையுள்ள மனிதர்களின் குறைகளை நீக்கி அவர்களை ஏற்றுக் கொள்வது நலம் பயக்கும். மனித நேயமும் மாண்புறும். குற்றம் பார்க்கின் சுற்றம் கெடும் என்ற முதுமொழியும் இதைத்தான் நமக்குக் கூறுகின்றது.

குறையை ஒத்துக்கொள்வது:

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

மற்றவர்கள் குற்றம் காண்பது போல ஒவ்வொருவரும் தம் தம் குற்றத்தை உணர்ந்தார்களேயானால் நிலைபெற்ற நம் உயிருக்கு தீது எதுவும் வருவதில்லை என்பதைத் தான் மேலே கண்ட குறள் விளக்குகின்றது. தமது குற்றத்தை உணரும் போது தான் அதைக் களைவதற்கும் முயற்சி செய்ய இயலும். ஒரு தடவை போரில் தோற்றுவிட்ட சந்திரகுப்த மௌரியன் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தான். உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. அதுவும் அவனது பெயர் கேட்டதால், ஊன்றிக் கவனித்தான். அங்கு ஒரு தாயார் தனது மகனுக்குத் தோசை

சுட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார் பசியின் அவசரத்தில் இருந்த மகனோ அவசரத்தில் தோசையின் நடுப்பகுதியைப் பிய்த்துக் கையைச் சுட்டுக் கொண்டான். அம்மாவோ பையனை என்ன சந்திர குப்த மௌரியன் மாதிரி எடுத்தவுடன் நடுப்பகுதிக்குப் போய்விட்டாய். தோசை சாப்பிடும்பொழுது ஓரத்திலிருந்து பிய்த்துச் சாப்பிட்டு வரவேண்டும் என்று கடிந்து கொண்டார். சந்திர குப்த மௌரியனும் அந்தத் தாய் சுட்டிக் காட்டிய தவறை உணர்ந்து அடுத்த தடவை நேரடியாக தலைநகருக்குப் படையெடுத்து வராமல் எல்லையிலிருந்து ஒவ்வொரு பகுதியாக பிடித்து பின் நந்தர்களின் தலைநகரத்தையும் கைப்பற்றினான். இங்கு சந்திரகுப்த மௌரியன் தன் தவறை உணர்ந்ததால் தான் தோல்வியை வெற்றியாக மாற்ற முடிந்தது.

மேலும் தம்மிலும் கீழானவரிடம் குறையை ஒத்துக்கொள்ளும் பொழுது ஒரு மனிதன் மாமனிதன் ஆகின்றான்

உதவும் மனப்பான்மை:

உதவும் கரங்களாக வருவோரை யாரும் உதறித் தள்ள விரும்புவதில்லை. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்ற வள்ளலார் கூற்று பிறர் துன்பத்தை தமது துன்பமாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல்

என்ற குறள் நமக்கு தீங்கு செய்தவருக்குக் கூட நாம் நன்மையே செய்ய வேண்டும் எனப் போதிக்கின்றது. உதவும் மன்பான்மை இருந்ததால் தான் தொழுநோயாளியைக் கூட அய்யறவு எதுவுமின்றி அன்னை தெரசாவால் தொட்டு தூக்கிச் சேவை செய்ய முடிந்தது.

வள்ளுவனோ நட்பிற்கே இந்த உதவும் மனப்பான்மையை வைத்து இலக்கணம் எழுதியுள்ளான்.

உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

ஆடை நெகிழும் பொழுது கைதானாகவே அதைப்பிடிககச் செல்வது போல நண்பனின் துன்பம் கண்டவுடன் தானே சென்று உதவுவது தான் நட்பு. துரியோதனன் பக்கம் இருந்தால் கூட கர்ணன் நம் அனைவரின் மனதிலும் சிம்மாசனம் இட்டு அமருவதற்குக் காரணம் அவனுடைய அனைவருக்கும் உதவும் உதார குணம் தான். அதனால் தான் கம்ப நாடனும் சடையப்ப

வள்ளலையே இராமாயணத்திற்குள் கொண்டு வந்து விட்டான். செய்த நன்றியை மறப்பவனுக்கு மோட்சம் கூடக் கிடைக்காது என்று உதவியின் மகோன்னத்தை வள்ளுவனும் வலியுறுத்துகின்றான்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகர்க்கு

சிரித்த முகம்:

சிரிக்கத் தெரியாதவன் கடை திறக்கக் கூடாது என்று கூறுவர். சிரிப்பு என்பது ஒரு தொற்று வியாதி. அது மற்றையோரை எளிதில் பற்றிக்கொள்ளும். உண்மையில் நாம் சிரிப்பதற்கு நம் முகத்தில் 16 தசை நாண்களையும் கோபப்படுவதற்கு 72 தசை நாண்களையும் அசைக்கின்றோம். இதில் எது சிறந்த விசயமென்பது சொல்லித் தெரிய வேண்டுவதில்லை.

வள்ளுவப்பெருந்தகையோ இடுக்கண் வரும்கால் நகுக என்று கூறுகின்றார். வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும். நகைச்சுவை உணர்வு மனித இனத்தின் தனிப்பட்ட சொத்தாகும். ஏன் சிரிப்பதுமே மனித இனத்தின் தனிப்பட்ட சொத்து தானே. இயற்கை மனித இனத்திற்குக் கொடுத்த கொடை எனவும் கூறலாம். மேலும் நீங்களும் சிரித்து உங்கள் நகைச்சுவை உணர்வால் பிறரையும் சிரிக்க வைத்தால் மனித நேயம் சிறக்குமல்லவா?

நகைச்சுவை உணர்வு

நகைச்சுவை உணர்வு என்பது இயற்கை கொடுத்த வரப்பிரசாதம் என்பர். அப்படிப்பட்டவரை தேனீரை ஈ மொய்ப்பது போல அனைவரும் அவரைச் சுற்றி சந்தோஷமாக இருப்பர். என் வீட்டில் நடந்த நிகழ்வு ஒன்று எனக்கு நினைவிற்கு வருகின்றது. ஒரு சமயம் என்இளைய மகன் நடுவீட்டில் அமர்ந்து கொண்டு காலணிகளைக் கழட்டிக்கொண்டிருந்தான். என் துணைவியாருக்கோ எந்தப் பொருளும் அதனதன் இடத்தில் இருக்க வேண்டும். இவன் செய்வதைப் பார்த்த அவரோ அவனைச் சத்தம் போட ஆரம்பிக்கின்றார். அவனும் என் துணைவியாரிடம். அம்மா மியூசியம் போயிருக்கிறாயா? அங்கு தான் அதது அதனிடத்தில் இருக்கும். உனக்கு வீடு வேண்டுமா அல்லது மியூசியம் வேண்டுமா என்று கேட்டான். அவரும் சிரித்துக் கொண்டே அந்த காலணிகளை எடுத்து அதனிடத்தில் வைத்தார்.

நிறைய நகைச்சுவை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஜோக்குகள் படிப்பது உங்களையும் நகைச்சுவை உணர்வுடையவராக மாற்றும்.

பாராட்டுதல்;

நண்பனை நேரடியாகவும் மகனை அவன் இல்லாத விடத்தும் மனைவியைப் பஞ்சணையிலும் ஆசானை எல்லா இடத்திலும் பாராட்ட வேண்டும் என்று முதுபிராட்டி அவ்வை கூறுகின்றார். பிறரைப் பாராட்டுவது என்பது அவர்தம் செயல்திறனை ஊக்குவிப்பதாகும். ஆகையால் பாராட்டக் கற்றுக்கொள்ளுங்கள்.

இன்னும் சொல்லப்போனால் நாம் ஒவ்வொருவருமே நமது கழுத்தில் கண்ணக்குத் தெரியாத ஒரு சார்ட்டைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கின்றோம் என்ற ஒரு கூற்று உண்டு. இன்று எனது பிறந்த நாள். கல்யாண நாள் என்னைப் பாராட்டுங்கள். நான் புதிய சட்டை. கடிகாரம். காலணி அணிந்துள்ளேன் என்னைப் பாராட்டுங்கள் என்ற ஏக்கத்துடன் நாம் உலா வருகின்றோம் என்கின்றனர். நமது திறனே பிறரின் சார்ட்டில் மறைந்திருக்கும் எதிர்பார்ப்பைக் கண்டறிந்து பாராட்டுவதில் தான் அடங்கியுள்ளது. பாராட்டுவதில் மட்டும் உலோபியாக இருக்காது ஊதாரியாக இருங்கள்.

வார்த்தைகளால் மட்டுமல்ல நல்ல கரகோஷமும் ஒருவரை ஊக்குவிக்கும். ஆனால் நமது மனதில் ஒரு சின்ன தயக்கம். நாம் கைதட்டி பிறரை உற்சாகப்படுத்துவதால் நமக்கென்ன பலன் கிடைக்கும் என்ற கேள்வி உள்மனதில் ஓடுகின்றது. ஒரு வாழ்வியல் நிகழ்வை இங்கு உங்களிடம் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன். பஜாஜ் என்ற 78 வயது மனிதருக்குக் கண் பார்வை மங்கி விட அவர் ஒரு கண் மருத்துவரைச் சென்று பார்க்கின்றார். மருத்துவரோ இவர்வயதைக் காரணம் காட்டி இனி செய்வதற்கு ஒன்றுமில்லை என்று கூறிவிட்டார். இவரும் விடவில்லை. மேலும் பல ஆங்கில வழி மருத்துவர்களைச் சந்திக்கின்றார். ஆனால் கிடைத்ததெல்லாம் ஒரே பதில்தான். ஆனால் தன்

முயற்சியில் சற்றும் மனம் தளராத நமது நண்பர் ஓர் ஆயுர்வேத மருத்துவரைச் சென்று பார்க்கின்றார். அவரோ கண்களின் பார்வை நரம்புகள் உள்ளங்கைகளில் முடிவதால் கைகளை விடாது தட்டிப் பார்வை நரம்புகளைத் தூண்டிவிட பார்வை ஒருவேளை திரும்பக்கிடைக்கலாம் என்று கூறுகின்றார். நமது நண்பரும் ஒரு நாளில் 3000 தடவை 4000 தடவை என்று கை தட்டிக்கொண்டே இருந்தார். ஒரு நாள் அவர் கண்பார்வை முழுமையாக திரும்ப கிடைத்து விட்டது. ஆனால் அவர் அத்துடன் நிறுத்தி விடாது கின்னஸ் புக் ஆப் ரிக்கார்டில் ஒரு நாளில் அதிகம் முறை கைதட்டியவர் என்று அவர்பெயரை பொறித்து விட்டுத்தான் ஓய்ந்தார். இதைப்பற்றிய செய்தியை குமுதம் பத்திரிக்கையிலும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிலும் படித்துத் தெரிந்து கொண்டதைத்தான் இங்கு உங்களிடையே பகிர்ந்து கொண்டுளளேன். இந்த யோசனையை நானும் பயன் படுத்தி வலது கண்ணில் பவர் 1ம் இடது கண்ணில் பவர்0.75ம் இருந்த என் கண்களைச் சரி செய்து விட்டேன். ஆனால் கண் மருத்துவரை அணுகிக் கேட்ட பொழுது பவர் குறைந்ததை தன் சோதனை மூலம் ஏற்றுக் கொண்ட அவர் மேற்படி வழிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் ஒன்று நிச்சயம். கைதட்டுவதால் மற்றவர்கள் உற்சாகப்படுவது மட்டுமல்ல பார்வை நரம்புகளும் பலப்பட அது வழிவகுக்கின்றது என்பதை மேலே கண்ட இரண்டு உதாரணங்களால் தெரிந்து கொள்கின்றோம். ஆகையால் இன்று முதல் உங்களைச் சுற்றியுள்ள அனைவரையும் பாராட்ட ஆரம்பியுங்கள் உங்களைச் சுற்றி சந்தோஷம் நிலவும்.

மேலே கூறப்பட்ட குணநலன்களைக் கைக் கொண்டால் உங்கள் மனித நேயப் பண்புகள் சிறக்கும். மன்னு புகழ் மனித நேயம் இம் மண்ணில் செழிக்கும்.